உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உஅ.] பிரமோதூதவரு ஆவணிமீ [பகுதி-கo
Vol. XXVIII. August–September 1930. No. 10.

ஸ்ரீ:

வெண்பாமாலையாராய்ச்சி.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ், ஆசிரியர்
ஸ்ரீமாந். T. N. அப்பனையங்கார் எழுதுவது]

சிறப்புப்பாயிரம்.

மன்னியசிறப்பின்வானோர்வேண்டத்
தென்மலையிருந்தசீர்சான்முனிவரன்
றன்பாற்றண்டமிழ்நாவின் றுணர்ந்த
துன்னருஞ்சீர்த்தித்தொல்காப்பியன்முதற்
பன்னிருபுலவரும்பாங்குறப்பகர்ந்த
பன்னிருபடலம்பழிப்பின் றுணர்ந்தோ
னோங்கியசிறப்பினுலகமுழுதாண்ட
வாங்குவிற்றடக்கைவானவர்மருமா
னையனாரிதனகலிடத்தவர்க்கு
மையறுபுறப்பொருள்வழாலின் றுவிளங்க
வெண்பாமாலையெனப்பெயர்நிறீஇப்
பண்புறமொழிந்தனன்பான்மையிற்றெரிந்தே.

என்பது பாயிரம். 'இதனுட் பாயிரமுரைத்த வெல்லா முரைத்துக் கொள்க' என்பது பழைய வுரை. அங்ஙனமுரைக்குங்கால் ஐயனாரித னெனவே ஆக்கியோன்பெயரும், பன்னிருபடலம் பழிப்பின்றுணர்ந்

தோனெனவே வழியும், அகலிடமென்றதனால் தமிழ்வழங்கு நிலமாகிய அதன் நாற்பாலெல்லையும், வெண்பாமாலையெனப் பெயர் நிறீஇ யெனவே நூற்பெயரும், "சொல்லின்முடிவினப்பொருள்முடித்த"லாக வெண்பா மாலை யென்றதனால் யாப்பும்,* மையறு புறப்பொருளெனவே நுதலிய பொருளும், இடத்தவர்க்கு எனவே கேட்போரும், வழாவின்று விளங்க எனவே பயனும் ஒருவகையாக உணரப்படுவன.

இன்னும், மன்னியசிறப்பின் என்பதுமுதல் பன்னிருபடலம் என்பதுகாறும் முதனூலின் பெருமையும், அதனைப் பழிப்பின் றுணர்ந்தோன் என்றதனால் ஆக்கியோன்பெருமையும், ஓங்கிய சிறப் பின் என்பதுமுதல் வானவர்மருமான் என்பதுகாறும் இதன் ஆசிரியர் போர்த்தொழில் விரும்பிப் புறத்துறை நிகழ்த்தும் வேந்தர் குலத்தின் ஏந்தலாய் வந்தார் என்னுங் கருத்தொடுபட்டு அன்னார்க்கு இந்நூலின் கண்ணுள்ள கிழமையும், பான்மையிற்றெரிந்து பண்புற மொழிந்தன னென்றதனால் நூலின்பெருமையும் ஒருங்குகொள்ளக்கிடக்கின்றன.

ஐயனாரிதனென்பது, ஐயன் - ஆரிதன் என விரியும். ஆரித னென்பது ஹாரீத: என்னும் வடமொழிப் பெயர்த்திரிபு. அப்பெயர்

---

* யாப்பென்பதற்கு, இன்ன நூலாராய்ந்தபின்ன ரிதுகேட்கற்பாற்றென் னும் யாப்பு எனவும், தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பென் னும் நால்வகை யாப்பெனவுமே உரையாசிரியர்கள் கூறினராயினும், அவற்றொடு சேர இங்ஙனம் இவ்வகைச்செய்யுளா னியன்ற திந்நூல் என அஃதியாக்கப் பெற்றமுறையினையுரைத்தலும் ஓராற்றாற் பயனுடைத்தென்று வேண்டப்படும். அல்லாக்கால், "மூன்றுறை மன்னவ னான்கடியுஞ் செய்தமைத்த, இன்றுறை வெண்பா இவை" எனவும், "வள்ளுவருந் தங்குறள்வெண்பாவதனால் வையத்தா, ருள்ளுவவெல்லா மளந்தா ரோர்ந்து" எனவும், "நனியார்வேம் பொங்குகலி யின்பப் பொருள்" எனவும், "ஆசிரியப்பாவதனா லருமறைநூல் விரித்தானை" எனவும், "செகத்தினில் விருத்தயாப்பாற் செய்கெனச் செய்ததன்றே" எனவும் வருவனபோன்ற இலக்கியங்கட்கு இலக்கணமின்றாய் முடியும். அன்றியும் ஆசிரியரிளங்கோவடிகள், சிலப்பதிகாரப்பதிகத்து, "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யு ளுரைசாலடிக ளருள" எனக்கூறியதும் இதுபோன்றதொரு வகை யாப்புறவினைக் கருதியே யென்க. "வெண்பா விருகாலிற் கல்லானை" என அவ்வியாப்பின் கற்றற்கெளிமை நோக்கி, அதனானியன்ற நூலினைப்பயி லற்கண் மாணாக்கர்க்கு மூர்ந்துற வூக்கஞ்செல்லு மென்பது போல்வன பயன், பிறவுமன்ன, விரிப்பிற் பெருகும்,

அம்மொழிக்கண்ணதென்பதை 'ஹாரீதஸ்ம்ருதி' 'ஹாரீதகோத்ரம்' என்னும் வழக்குண்மையாலறியலாம்.

இப்பாயிரங்கூறினார் ஆசிரியர் ஐயனரிதனாரே யென்று பேராசிரியருரையான் விளக்குகிறது. (தொல், மரபு, 94.) ஆதலின் இது தற்சிறப்புப்பாயிரமென்றுகொள்ளப்படும்.

இனி, முதனூலாகிய பன்னிருபடலமியற்றினார் தொல்காப்பியர் முதலிய பன்னிருபுலவருமென்பது இப்பாயிரத்தானன்றி அந்நூற்சிறப்புப்பாயிரத்தானும் வலியுறுவது. அது,

"வீங்குகடலுடுத்தவியன்கண்ஞாலத்துத்
தாங்காநல்லிசைத்தமிழ்க்குவிளக்காகென
வானோரேத்தும்வாய்மொழிப்பல்புகழ்
ஆனாப்பெருமையகத்தியனென்னும்
அருந்தவமுதல்வனுக்கியமுதனூல்
பொருந்தக்கற்றுப்புரைதபவுணர்ந்தோர்
நல்லிசைநிறுத்ததொல்காப்பியனும்"

(தொல், மரபு. 94, உரை).

எனவரும். ஆயினும் உரையாசிரியரிளம்பூரணர் இவ்வுண்மைக்கு மாறுகொளக் கூறுவர்.

அவர், வெட்சித்திணையுள் மன்னுறுதொழி லொன்றனையே தொல்காப்பியர் கூறியதாகவும் அதனைத் தன்னுறுதொழிலும் மன்னுறுதொழிலுமென இருவகைப்படுத்துதல் மிகையெனவும் கொண்டு, அதனால் பன்னிருபடலத்து வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினாரென்றல் பொருந்தாது என்றார். அன்றியும் தொல்காப்பியத்தோடு பன்னிருபடலம் பலவாறு வேற்றுமைகொள்வது மயங்கக்கூறலும் குன்றக்கூறலுமா மாகையால் முனைவனூலிற்கும் சான்றோர்செய்யுட்கும் உயர்ந்தோர்வழக்கிற்கும் பொருந்ாதென வுரைத்தார். அங்ஙனமாயினும் சிலவிடத்துத் தொல்காப்பியச் சூத்திரப்பொருள் துணிதற்கு அவர் பன்னிருபடலத்தை மேற்கோளாக எடுத்தாளுகின்றார். ஆகையால் அவர்கூற்று முன்னொடுபின் முரணுதலுடையதாம்.

நச்சினார்க்கினியரும் பன்னிருபடலத்து வழக்குகள் சிலவற்றைத் தமிழ்கூறு நல்லுலகத்தன அல்ல என்றார். ஆயினும் அந்நூலுள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் செய்ததன்று என அவர் எவ்விடத்தும் உரைத்தாரல்லர்.

தொல்காப்பியத்தோடு பன்னிருபடலம் பின்வருமாறு வேற்றுமையுறுவது. முன்னையது புறப்பொருளை எழுதிணைகளாக வகுத்துரைக்க, பின்னையது அதனைப் பன்னிரண்டு பகுதிப்படுத்தும். முன்னது நிரைகோடலையும் நிரைமீட்டலையும் வெட்சியென வொன்றுபடக்க, பின்னது அவற்றை வெட்சி, கரந்தையென வேறு வேறு வழங்கும். ஒன்று, மேற்செலவும் எதிரூன்றலும் வஞ்சியாமென்ன, மற்றது அவற்றை வஞ்சி, காஞ்சியென இரண்டாகப்பிரிக்கும். முதலது பலவேறு நிலையாமை குறிப்பது காஞ்சியெனக்கூற, இரண்டாவது அவைமுதலாயவற்றைப் பொதுவியலுளடக்கும். தொல்காப்பியம் எயில்முற்றல், எயில் காத்தல் இரண்டையும் உழிஞை என்னும். பன்னிருபடலம் அவற்றை உழிஞை, நொச்சி யெனத் தனித்தனி வழங்கும். கைக்கிளை, பெருந்திணையென்பன தொல்காப்பியத்து அகத்திணையியலுட்கூறிவிடுக்கப்பட்டன. அவை பன்னிருபடலத்துப் புறப்பொருளவாக முடிக்கப்பட்டன. இவையெயன்றி, தொல்காப்பியத்துப் புறத்திணைகளேழனையும் ஒவ்வோரகத்திணையின் புறனுமெனவுரைக்க, பன்னிருபடலம் அவ்வாறொன்றுங் கூறாதுசெல்லும்.

இங்ஙனம், பன்னிருபடலத்துக்குக்கூறியனவெல்லாம் அதன் வழிநூலாய வெண்பாமாலைக்கும் ஒப்பன. இவை பொதுவகையானமைந்த வேறுபாடுகள் சில. மற்றும் சிறப்புவகையான துறைவிகற்பங்கள் பலவுள. அவை இவ்வாராய்ச்சியில் ஆங்காங்கு உரைக்கப்பெறும். புறப்பொருளிலக்கணமுணர்த்துவதில் தொல்காப்பியம் பன்னிருபடலம் என்னும் அரிய பெரிய இருநூல்களிடையும் வேறுபாடுகாண்டலால் அவை ஒன்றோடொன்று முரணுதலுடையன என்பதை விடுத்து, "அவை சொன்முடிபும் பொருண்முடிபும் வேறுபடாமையின் மரபுநிலை திரியாதன" என்றல் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ உ. வே. சாமிநாதையாவர்கள் துணிபு. (வெ மாலை முகவுரை பக். 2.)

பிற சான்றோர் புறத்திணைகளைப் பன்னிரண்டாகக்கூறியிருப்பத் தொல்காப்பியனார் அவற்றை ஏழென மொழிந்ததற்கு அழகாக அமைதி கூறினர் நச்சினார்க்கினியர். இதனை "ஒழிந்தோர் பன்னிரண்டென்றாராக விற்புறத்திணை ஏழென்ற தென்னையெனின், அகங்கை இரண்டுடையார்க் குப்புறங்கை நான்காகாது இரண்டாயவாறுபோல அகத்திணை ஏழற்கும் புறத்திணை ஏழென்றலே பொருத்தமுடையதாயிற்று (தொல்காப்பியம்—1-ம் சூத்திரவுரை) என்றதனாலறிக. ஆயினும் வெண்பாமாலையுடையார் கொள்கை தொன்னூற்றுணிபுபற்றியதாகலின் அதுவும் இழுக்கின் றென்பது.

வெட்சிப்படலம்.

வெட்சியென்பது குறிஞ்சிநிலத்துப்பூவகையினுள் ஒன்று. அப் பெயர் இங்கு அப் பூச்சூடும் மறவாது புறத்தொழுக்கத்தை உணர்த்தி நின்றது. அவ்வொழுக்கமாவது, இருபெருவேந்தர் பொருவது கருதியக்கால் மூந்துற ஒருவர் மற்றொருவாது ஆநிரையைக் கவர்ந்து கோடலாம். இது போர்தொடங்கற்கு முன்னதாக நிகழ்தற்குரியது.

நிரைகவரச் செல்வார் வெட்சிப்பூச் சூடுவரென்பது, இந்நூல் வெட்சியரவத்துள் "துடிபடுத்து வெட்சிமலைய" என வருவதனால் விளங்கும்: "வெவ்வாய் மறவர் மிலைச்சிய வெட்சியாற், செவ்வானம் செல்வதுபோற் செல்கின்றார்".(தொல்புறத். நச். உரை.)எனவும் "வெட்சி மாமலர் வேங்கை யொடுவிரை இச், சுரியிரும் பித்தை பொலியச் சூடி" புறம் 100) எனவும் பிறருஞ்சொன்னாரென்க. மேல்வரும் வாகையீறுய திணைகட்கும் அவ்வப்பூச்சூடுதல் உரித்தென்று ஆசிரியர் விளங்கக் கூறினர். இதுபன்னிருபடலத்தை அடியொற்றின வழக்கு.

இங்ஙனம் பூச்சூடும் மரபினைத் தொல்காப்பியம் எவ்விடத்தும் வெளிப்படக் கூறிற்றில்லை. ஆயினும் பிறநூன் முடிந்தது தானுடம் படுதல் தந்திரவுத்தியாகலின் அந்நூலாசிரியர்க்கும் அஃதுடன் பாடே யாம். இவ்வுண்மை அதன்உரைகளினாலுந் தெளியப்பட்டது. மற்றும் இம்மரபினை வலியுறுத்தும் இலக்கியங்களும் மிகப்பல. பதிற்றுப் பத்தினுள் (58) "கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்" என்னுமடிக்கு 'தாங்கள் சூடும் போர்க்கண்ணிக்கேற்ப வினைசெய்யக்கருதிய வயவர்'

என உரைக்கப்பெறுதல் நோக்கிக்கொள்க. வடமொழி வான்மீகமும் இத்தமிழ்வழக்கினை ஓரிடத்துக் குறிப்பிட்டுள்ளதென்பர். (செந்தமிழ் தொகுதி 5-பக்.)

இனி இவ்வெட்சித்திணையை அகத்திணையாய குறிஞ்சியின்புறனென்றார் தொல்காப்பியனார்; "வெட்சிதானே குறிஞ்சியது புறனே" என்பது காண்க. ஐயனாரிதனார் அது தோன்றக் கூறிற்றிலர். புறப்பொருளைப் பன்னிருதிணைப்படுத்துவார்க்கு இன்னதற் கின்னது புறமெனல் இயலாதென்று கருதினர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். ஆயினும் வெண்பாமாலையுடையார் அக்கொள்கையினை நன்குணர்ந்தவரென்பது ஆங்காங்குள்ள குறிப்புக்களால் வெளிப்படும். "ஏற்றினம் நின்ற நிலைகருதி யேகினார் நீள்கழைய குன்றம்" (வெ மா 5) என இவர் வெட்சியொழுக்கம் குறிஞ்சிநிலத்து நிகழ்வதாகக் கூறினாற் போல்வன இதற்குச் சான்று.

வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயவாறென்னையெனின், "நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயினார் பிறநாட்டு ஆநிரையைக் களவிற்கோடல் ஒருபுடை குறிஞ்சிக் குரித்தாகிய களவொடு ஒத்தலானும், சூடும்பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்" என்பது உரையாசிரியருரை. 'களவொழுக்கமும், சிறுகாலமும், காவலர்சுடுகினும் தான்கருதிய பொருளை இரவின்கண் முடித்துமீடலும் போல்வன ஒத்தலின் வெட்சிகுறிஞ்சிக்குப்புறன்" என்பது நச்சினார்க்கினியருரை. இங்ஙனம் கூறிய காரணங்கள் வெண்பாமாலையுடையார் கொள்கைக்கு விலக்கல்ல. ஆயின் இவ்வாசிரியர் கரந்தையென வேறுதிணை வகுத்தோதியது எதன்புறமாமெனின், அதுவும் குறிஞ்சியின் புறமென்று கொள்ளலாகும். அதனை அப்படல ஆராய்ச்சியிற்கண்டுகொள்க.

இங்ஙனம் வெட்சிவீரர் மாற்றாரது ஆநிரையைக் கரவாற்கோடல் தீதெனப்படாது அறமேயாம் எனபர் நச்சினார்க்கினியர். அதுபற்றியே ஆசிரியர் தொல்காப்பியர் "களவின் ஆதந்தோம்பல்" எனச் சூத்திரஞ் செய்தாரென்றும் அவர் கூறுவர். "ஒருவர்நாட்டு வாழும் அந்தணரும் ஆவும் முதலியன தீங்குசெய்யத்தகாத சாதிகளை ஆண்டுநின்றும் அகற்

றல்வேண்டிப் போதருக எனப் புகறலும், அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினாற் றாமே கொண்டுவந்து பாதுகாத்தலும் தீதெனப்படாது அறமேயாம் என்றற்கு 'ஆதந்தோம்பல்' என்றான். அது,

'ஆவுமானியற்பார்ப்பனமாக்களும்
பெண்டிரும்பிணியுடையீரும்பேணித்
தென்புலவாழ்நர்க்கருங்கடனிறுக்கும்
பொன்போற்புதல்வர்ப்பெறாஅதீரும்
எம்மம்புகடிவிடுதும்நும்மரண்சேர்மினென
அறத்தாறுநுவலும்பூட்கைமறத்தின்' (புறம் ௯.)

எனச் சான்றோர் கூறியவாற்றானுணர்க. மன்னுயிர்காக்கும் அன்புடை வேந்தர்க்கு மறத்துறையினும் அறமே நிகழும்." என்பது அவருரை. பின்னிகழவிருக்கும் போருக்கு முன்னதாக ஆவினைக் கவர்ந்துகொண்டதுணையே அவ் வேற்றுப்புலத்துவாழும் பார்ப்பார் முதலியோர் அஞ்சி அரண்சேர்வ ரென்பது கருத்து. பார்ப்பார் முதலிய தீங்குசெய்யத் தகாதோர் இவரென்பதை,

"பார்ப்பாரறவோர்பசுப்பத்தினிப்பெண்டிர்
மூத்தோர்குழவியெனுமிவரைக்கைவிட்டுத்
தீத்திறத்தார்பக்கமேசேர்க"

என்னும் சிலப்பதிகாரத்தானும் (அழற்படுகாதை) அறியலாம்.

களவென்னுஞ் சொற்கேட்டுக் களவுதீதென்பதன்று; அது நல்லதாமாறுமுண்டு என்று தொடங்கி, "ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து நஞ்சுண்டு சாவலென்னு முள்ளத்தளாய் நஞ்சுகூட்டி வைத்து விலக்குவாரில்லாத போழ்து உண்பலென்று நின்றவிடத்து, அருளுடையா னொருவன் அதனைக்கண்டு இவளிதனை உண்டு சாவாமற் கொண்டுபோயுகுப்பலென்று அவளைக் காணாமே கொண்டுபோ யுகுத்திட்டான். அவளுஞ் சனநீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள் அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினான் உய்யக்கொண்டமையான் நல்லுழிச்செல்லுமென்பது. மற்றும் இதுபோல்வன களவாகா நன்மை பயக்குமென்பது," எனவரும் இறையனார்

களவியலுரை (சூத்தி. 1) இங்கு நினைக்கத்தக்கது. களவு நிகழ்கின்ற குறிஞ்சிப்பொருளாகிய கந்தருவமணம் வேதவிதியானே இல்லறமாயினாற் போல நிரைகவர்தலும் ஒரு நல்லறமே யாமென்க.

புறப்பொருட் குரியன அறனும் பொருளுமாகலின், இவ்வெட்சித் திணை அறத்தாற் பொருளீட்டுமாறு குறிக்கின்றது. போர்த் தொடக்கத்தின் முன் நிகழ்தற் குரிமைபற்றி இது முதற்கண் வைத்து மொழியப்பெற்றது. 'சண்டைக்கெடுபிடி மாடுபிடி' என்பது உலக வழக்கு. "புறப் பொருட் பாகுபாடாகிய பொருளினும் அறத்தினும் பொருள்தேடுதற்குரியார் நால்வகை வருணத்தாரினும் சிறப்புடைய அரசராதலானும், அவர்க்கு மாற்றரசர்பால் திரைகொண்ட பொருள் மிகவும் சிறந்ததாகலானும், அப்பொருளெய்துங்கால் அவரைப் போரில் வென்றுகோடல் வேண்டுதலானும், போர்க்கு முந்துற நிரைகோடல் சிறந்ததாகலானும், இப்பொருள் முன்கூறப்பட்டது" என இளம்பூரணரும் விளம்புதல் காண்க.

இவ் வெட்சியொழுக்கம் அச்சத்தாற் பிறரறியாமைக் களவுகாணும் பேதைமக்களின் இழிதொழில் போல்வதன்று. அறத்தின்வழி நிற்கும் அரசன் பொருளீட்டுமுயற்சியில் தன் தோள்மிடுக்காற் பிறரைத் தாழ்விப்பான் போர்தொடங்கும் முன் இதனைச் சிறந்த அறமென்று மேற்கொள்ளுதலின் இது மறனிழுக்கா மானமுடையதாகும்.

பழந்தமிழ்மக்களின் இவ்வரிய போர்முறை பாரதத்துள்ளும் பயின்றுவருகின்றது. விராடநகரத்துப் பசுநிரைகளைத் துரியோதனாதியர் கவர்ந்து சென்றதும், அதனாற் பெரும்போர் நிகழ்ந்ததும் கற்றோர் பலரும் நன்கறிந்தன. இந்திரனுடைய பசுக்கூட்டத்தை ஒருநான்று விருத்திரன் கவர்ந்துசென்றானாக, இந்திரன் அவனொடு போர்செய்து அவற்றை மீட்டுவந்தான் என இதுபோன்றதொருவரலாறு இருக்கு வேதத்தினும் கேட்கப்படுமென்பர். ஆகலின் இத்தமிழ்வழக்கின் பழைமையும் பெருமையும் பாராட்டற்குரியன.

(தொடரும்).

உ

சிவமயம்.

பிராசாத தீபம்.

முன்னுரை.

சைவர்கட் குரிய பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞான மென்னும் நான்கனுள் யோகம் பலதிறப்படும். அவற்றுள் பிராசாத யோகமென்பதொன்று. அது உடலினுள்ளே மூலாதாரமுதல் பிரமரந் திரமட்டாக வாயுக்களைநிறுத்தி ஆன்மா அடியார்க்கெளியனாகிய சிவ பெருமானைத் தெரிசிப்பதுவாகும். யோகநிலையில் சித்தியடைந்தார்க்கே அதனைச் செவ்வனே விரித்தலியலும். அன்றியும் எழுதிப்படித்துத் தெரிந்துகொண்டு சாதிக்கவல்லதொரு சாத்திரமன்று. யோகமெல்லாம் ஆசானிடமிருந்து முறையாக அதனதன் தத்துவங்களைக்கேட்டு அறிவ தாகும்.

இனி இப்பிராசாதம் என்பது திரிகலை, பஞ்சகலை, அஷ்டகலை, நவ கலை, தசகலை, துவாதசகலை, ஷோடசகலை, விம்சதியெனப் பலதிறமாகக் கூறப்படும் ஆயினும் அவையெல்லாம் ஒன்றினையே கூறுவனவாம். இவற்றுள்ளே துவாதசகலையும் ஷோடசகலையுமே வெகுவாகப் பயிலப் படுவது. வடமொழியிலே பிராசாத ஷட்ஸ்லோகி என்றொரு நூலுண்டு. ஷோடசகலையினுள் துவாதசகலையடங்குமென்பது பிராசாதமாலை, பிரா சாததீபம், பிராசாதஅகவல் போன்ற நூல்களை வாசிப்பார்க்கு இனிது புலனாம். பிராசாதமாலை யென்பது திருக்கயிலாயபாரம்பரை தருமபுர வாதீனத்தின் பிரதமாசாரியராகிய ஞானசம்பந்தரது குருவான கமலை ஞானப்பிரகாசதேசிகர் பன்னிரண்டு திருவிருத்தத்திற்செய்த ஒரு பாமாலை. பிராசாத அகவலென்பது காவை அம்பலவாணத்தம்பிரான் செய்தது. மெய்கண்டசந்தான பரம்பரையில்வந்த சந்தானகுரவ ராகிய கொற்றங்குடி உமாபதிசிவம் செய்தருளிய சிவப்பிரகாசச் செய் யுட்களின் கருத்து நன்கு விளங்கும்பொருட்டுக் குறளடியினாலே சிவப் பிரகாசமூலக்கருத்து என்ற நூலைச்செய்தவர் இவரே. இதற்குக் குமட்பா ஹ்ருதயம் என்று மொரு பெயருண்டு. இவருடைய சந்ததி யிலே வந்தவர்தான் சிவப்பிரகாசத்துக்கு உரைகண்டவரும் ஞானப்பிர

காசாது சிடருமாகிய மதுரைச் சிவப்பிரகாசர். அம்பலவாணர் செய்த பிராசாதம் அகவற்பாவாலானது. இங்கு அச்சிடப்பெறும் நூலோ பிராசாத தீப மெனப் பெயர்பெறும். இதனை இயற்றியவர் பெயர் மூதலியன விளங்கவில்லை. எனினும் இவர் கூறிய காப்புச் செய்யுளானும், குருவணக்கச்செய்யுளானும் வெங்குரு வேந்தன் திருவவதாரஞ்செய்த சீர்காழிப்பதியினர் என்பதும் வள்ளல் சந்தானத்தைச் சார்ந்தவரென்பதும் அறியக்கிடக்கின்றது. இச்செய்யுள்களுடன் பஞ்சாக்கரமாலை[1] யென்ற ஒரு சைவசித்தாந்த நூலின் இறுதியிலே காணப்படும்

காழிநகர் வாழி கவுணியர்கோன் றாள்வாழி
வாழியருட் கண்ணுடைய வள்ளல்தாள்—ஏழிசையின்
றெய்வத் தமிழ்ப்பாடல் வாழி திருநெறியாஞ்
சைவத் தவர்வாழிதான்.

என்ற செய்யுளும் ஒரு படித்தாக நிற்றலின் இப்பிராசாதமாலையை யியற்றியவரும் பஞ்சாக்கரமாலை உரை இயற்றியவரும் ஒருவரோ வென்று ஐயுற இடந்தருகின்றது. பஞ்சாக்கரமாலை காழிக்கண்ணுடைய வள்ளலார் இயற்றியதென ஏட்டின் முகப்பில் வரையப்பட்டுளது. ஆகவே பஞ்சாக்கரமாலையை யியற்றியவர் இவரெனத் திட்டமாகத் தெரிகின்றது. மேற்காட்டிய வெண்பாவை நூலாசிரியரே இயற்றியதெனல் பொருந்தாக் கூற்றாகலானும், அவ்வெண்பாவிற்கானும், 'காழிநகர்வாழி கவுணியர் கோன் றாள்வாழி' யென்பதும், இந்நூலிற் காணப்படும், 'காழிக்கை வரை, வெங்குருமாநகர்வள்ளல்' என்ற தொடர்களும் இக்கூற்றுக்கு ஆதாரமாகின்றன. அஃதெவ்வாறாயினும் இந்நூல் ஒரு அனுபூதிமானால் இயற்றப்பட்டதென்பதிற் றடையில்லை. அன்றியும் இது, பிராசாத அகவல், பிராசாதமாலைகளைவிட விரிவாகக்கூறும் நூலாகும். பிராசாத மாலையிற் காணப்படும் காப்பு நீங்கிய பதினொரு விருத்தங்களும் சிறிது பிறழ்ச்சியுடன் இந்நூல் 28—38 செய்யுட்களிற் காணப்படுகின்றன. அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிஞர்களறிந்துகொள்ளும் பொருட்டு அச்செய்யுட்களையும் இதனுடன் சேர்த்துள்ளேன்.

இதனையச்சிடுதற்குக் கிடைத்த பிரதிகள் மூன்று. ஒன்று என்னிடமிருந்த மிகச் சிலமான பிரதி. மற்றொன்று சென்னை சர்வகலா

[1]இந்நூல் விரைவில் உரையுடன் வெளிவரும்.

சாலையில் தற்பொழுது ரீடர் பதவி வகிப்பவர்களும், தமிழ்மொழி வளர்ச்சியில் தங்காலமுழுமையும் செலுத்திவரும் அருங்கலை விநோதரு மான திருவாளர் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், M.A. அன் புடனுதவியது. இவையிரண்டினையும் வைத்தெழுதிக்கொண்டு சென்னை இராசாங்கக் கையெழுத்துப் புத்தகநிலையத்திலுள்ள ஒரு பழையஏட்டுச் சுவடியுடன் ஒப்புநோக்கிக்கொண்டேன். பிள்ளையவர்கள் பிரதியே மிக வும் பயன்பட்டது. அவர்களுடைய நன்றி ஒருநாளும் மறக்கற்பால தன்று. ஆயினும் இப்படிப்பட்ட அநுபவ நூல்களை யச்சிட யான் சிறிதும் அருகனல்லனெனினும் இவற்றைக் கண்ணுறும் அறிவுடைப் பெரியார் எவரேனும் தெளிவுபெற அச்சிட முன்வரக்கூடுமென்ற நம் பிக்கையானே இதனை வெளியிடுகிறேன்.

குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கட னென்று விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை
திருவாரூர். சோமசுந்தர தேசிகன்.

உ
சிவமயம்.

பிராசாத் தீபம்.

[காப்பு.]

1 வையமிசை மன்னுயிர்கள் முத்திபெற வானருளால் வகுத்த நூலி
லெய்துபிரா சாதமுரைத் தற்கிறைவ னிமவரையி னிறைவி யீன்ற
செய்யசிறந் தொருகோட்டு மும்மதத்து நால்வாயைங்கரஞ்சேர்காழிக்
கைவரையினிருபதமெங்கண்ணிணை சேர்த்திதயமதிற்கருதல்செய்வாம்.

குருவணக்கம்.

2 விஞ்சதியுஞ் சோடசமுந் துவாதசமுந் தசமுநவ மேவு மெண்ணு
மைங்கலையி[1] னுமத்தா லெண்வகையா லாகமங்க ளறைந்த வாற்றால்
வெங்குருமாநகர்வள்ளல்பதம்பரவியெண்ணிரண்டுகலையின்மேன்மை[2]
துங்கமுறப் பிராசாத தீபமெனத் தமிழினாற்[3] சொல்ல லுற்றாம்.

[பி-ம்] [1] றைங்கலையி. [2] மென்னுமத். [3] தமிழிற்.

நூல்.

3 வெண்கமல நாலிதழா மூலாதா ரத்தின்
மிகநாப்பண் ணூன்றி விருத்தாகாரச் சர்ப்ப
மங்குதுபோ லெழுந்திருக்குங் குண்டலியினடுவே
யரவிந்த நூல்போலங் கெழுபத்தீராயிர[1]
மெண்படுநாடிகளுக்கு மூலமதாம் பிரம
மெனுநாடி மத்தியத்தினசலைமனு வகாரத்
தொண்டயிலு நிறமின்னி னொளியாகி யெழுந்தங்
குயர்நாபியடியறவாயுறும்விரற்பன்னிரண்டே. ௧

4 வருநாபிக் கீழ்க்கோண மூன்றுகு நிறம்பால்
வலக்கோணத் தோங்கார மருவுமிடக் கோணி
லொருவாத ரீங்கார மாமதன்மேற் கோணத்
தொள்ளிதழா றுயமரைக் கர்ணிகையுண் ணடுவே
பொருநாடி பொருந்துமதற் கிருபுறமும் விருத்தம்
பேசியிடும் வேணுவெனப் பிரிவறும்வீணைதண்
டுருவாதியாய்ப்பிரம ரந்திரமட்டாக
வுறுமிடக்கோ ணத்துதித்த வுயிரிடைநாடியதும். ௨

5 உற்றவலக் கோணுதித்த பிங்கலைநாடியது
மூளக்கமல முதலைந்தி லுறுவது நீங்குவதாம்[3]
பிற்றையுமன் றுடிபுரு மத்தியமவ் வளவாய்ப்
பிரிவறவே வந்திரண்டு நாசியினிற் பிறங்கு
முற்றருமக் கோணத்தி லிரண்டெழுத்தி னிறந்தான்
முதிருமறைச் சிகையொளியாய் மூலமுதல் நாபி
மற்றளவும் வியாத்த மனுகதசிவமா மென்பர்
வருநாபி யதன்மேலெட் டங்குலமா மவையுள். ௩

6 அகாரகலை நிறமூரைக்கிற் சொரிதழல்போ லொளியா
மக்கலையெங் கும்விரவி யமர்ந்திருக்கு மதுவும்
பகாதருமாத்திரைமூன்றுலளவிடப்பட்டிருக்கும்
பகருமகா ரத்தில்மன முதலறுநான் காக
நகாதசுத்த தத்துவங்க ளொடும்வியா பகமாய்
நண்ணுசடத் துவாக்களுக்கு நாயகமு மாகி
விகாதமுறும் பலபிரபஞ் சங்கடனை விரிக்கும்
வித்தான காரணமாய் விரைப்பதுமா சனத்தில். ௪

[பி--ம்] [1]ராயிரமா, [3]நீங்குறுவதாய்.

7 மேவியிடு நான்முகனங் கதிபதியா யிருப்பர்
மிக்கவித யாதிகண்டம் வியாபகமவ் வளவாய்த்
தாவிடுமெண் விரற்பிரமா ணத்திலுறு முகாரஞ்
சசியிரவி கூடொளிபோற் றயங்கிடுமாத் திரைதான்
பாவிரண்டா லளவிடப்பட் டுப்புருடன் முதலாய்ப்
பகாறுதத் துவத்துடனும் பற்றுசடாத் துவாக்கட்
கோவிடுமா லதிகார முதலாகி யிருப்ப
னுயர்கண்ட முதற்றாலு வங்குலமோர் நான்கே. ௫

8 விடகலையா மகாரநிற மின்னொளியா மாத்திரை
விளம்பியிடி லொன்றாகு மிருமாயா தத்துவத்
துடன்மருவி யெங்கும்வியா பகமவ்வா றத்துவாக்
குயிர்தேவ ருருத்திரனங் குவந்திருப்பன் றாலு
நடுமுதலாய்ப் புருவநடு வளவாயங் குலமு
நவில்நாலாம் விந்துநிறந் தீபமரை மாத்திரை
சுடர்மருவுஞ் சுத்தவித்தை யீசனிரு தத்துவத்
துடன்மருவி வியாபிக்கு மொளிகொளத்வாக் களுக்கே. ௬

9 முன்னிலையாய் நீடுமகே சுரனிருப்பன் புருவ
முதலாக நெற்றியந்த மொழிமூன்றங் குலத்தில்
மன்னுமர்த்த சந்திரன்வா னொளியாமாத் திரைகால்
வருங்கலைக ளைந்ததனிற் சடத்வாக்கள் கூடிப்
பின்னமற நிற்கையினாற் பிராசாதந் தூலப்
பெயராகு மர்த்தசந்திரன் மேல்மூன்றங் குலத்திற்
பன்னியிடு நிரோதிதிரி கோணநிறம் புகையாம்
பயில்வுறுமாத் திரையரைக்கா லாகுமெனப் பகரும். ௭

10 நிகழுநிரோ தியின்மேல் மூன்றங்குலத்தி னளவி
னீடியதண் டதுபோலா நாதமிரண் டருகும்
புகழுமிரு விந்துவதாம் நாதமுமா ணிக்கப்
பொங்கொளியாம் விந்துநிறம் படிகமெனப் புகல்வ
ரிகழ்வறுமாத் திரையதுமா காணியென விசைப்ப
ரிக்கலைக்கு மேற்பிரம ரந்திரமட் டாகத்
திகழ்மூன்றங் குலமதனில் நாதாந்தங் கலப்பை
சேர்வலத்து விந்துவுடன் செறியுநிற மூரைப்பாம். ௮

11 மின்னிரண்டு போலொளியாம் விந்துநிறங் கறுப்பாம்
மிகுமாத்திரை யரைமாவே யரைக்காணி யாகும்
பன்னியிடு மிம்மூன்றுஞ் சூக்குமமா மூன்னம்
பகர்ந்தகலை யோரைந்தும் பரிந்திவையிற் கூடி
லன்னதனை யட்டகலாப் பிராசாத மென்ப
ரரியசதா சிவஞ்சத்தி சிவதத்துவத் திலுக்கு
மன்னுமர்த்த சந்திரனே முதற்கலைநா லினுக்கும்
வழுத்தியிடுஞ் சதாசிவத்தைக் கர்த்தாவாய்த் துதியே. ௯

12 ஓங்கியிடும் பிரமரந்திரமே லோங்குகு லத்தி
லுருஞ்சத்தி விந்துவிடத் துறைகலப்பை போலாந்
தீங்கில்நிற மொருநூறு கதிர்ப்ரகா சமதாந்
திகழ்விந்தும் பச்சைநிறந் தீதறுமாத் திரைதா
னுங்கதைம்மூந் திரிகையதா மதன்மேலங் குலமூன்
றதனில்வியா பினிசூல மாகும்விந்து வலமாம்
நீங்கரிய நிறமதுவோ ராயிரமா யுதிக்கு
நிகழிரவி யொளிவிந்து நிறமிரத்த மாமே. ௰

13 அகலருமாத் திரையதரைக்காணியின்கீ ழரையா
மரைந்திடுங்கீழ்க் கலைகளெல்லா மமைவுடன் வியாபகமாய்ப்
புகலுகையால் வியாபினிய தென்பரிது விரண்டும்
போந்தகலை யிருநான்கும் பொருந்தல்தச கலையாம்
மிகலருவ வியாபினிக்கு மேனுலங் குலத்தி
லிருசமனை யிருகுச்சி நடுவிரண்டு விந்துப்
பகருநிற மொருகோடி சூரியர்போ லெறிக்கும்
பயில்விந்து நீலமுந்திரிக் கீழ்க்கால் மாத்திரையே. ௰௧

14 கீழ்வரைகூ றிப்போந்த கலைகளுமாத் திரையுங்
கிளர்சடத்வச் செய்கையினற் சமனையெனப்போம்
நீள்சமனை தனக்குமே லங்குலநா லதனி
னிகழ்த்திடுமுன் மனைவடிவு வட்டநிற மிருளாந்
தாழ்வறுமாத் திரையதுகீ ழரையதரைக் காலாந்
தகுமிரண்டு மதிசூக்குஞ் சாற்றிடுமூற் கலைகள்
கோள்பெறவே பொருந்திடுத றுவாதசநற் கலையாய்க்
கொண்டிடுவர் மேலுமகா சூக்குமத்தைக் குறிப்பாம். ௰௨

15 சொற்றிடுசூ னிளிகையுமா முன்மனைப்புதா ரத்திற்
சூழ்ந்திடுநல் விந்துபுக்குந் தொகுநாமஞ் சொல்லில்
விற்றருநல் வியோமரூ பையந்தை யனந்தை
மேவுமனா சிருதையென் றுன்னுகலை நாலாம்
மற்றதனில் வியோமரூ பிணிஞானா காய
மாயிருக்கு மென்றபடி மருவியிடு மனந்தை
யுற்றயன்மா லுருத்திரர்க்கு மளவிடவொண் ணாதா
மொளிகொளனா தையுமதற்கோர் முதலிலையென் றதுவே. ௰௩

16 அனுசிருதை யென்றதுமுன் கலைகளிலுந் தேக
மாதிபிர வஞ்சத்துந் தோன்றியிடு மதுவா
மனாதிகளுக் கனுகாத ஞானகா யமுமேல்
வளர்ஞான சமுத்திரமா ஞானதருப் பணமும்
பனுதசாற் காலத்தில் லொருநூறு யிரமாய்ப்
பகர்கோடி யிந்துவொளிப் பரப்பெனவும் வகுப்பர்
தனுதுகலை நாலுமதி சூக்குமபிரா சாதந்
தானாமூற் கலைபொருந்திற் சோடசமாய்ச் சாற்றும். ௰௪

17 மூலாதா ரம்முதலாய்ப் பன்னிரண்டு கலையில்
முறைமையதா யுள்ளடங்கும் பிராசாத மனுவை
மேலான பரமாசா ரியனாலே கண்டு
விளம்பிடுமாத் திரைப்பதங் கலையுமிக வறிந்து
மாலாற வுச்சரிக்கு மிடத்துமுற்சொன் மூலம்
வரும்பிரம நாடியதின் மத்தியத்தில் நின்றுங்
காலாக மேற்றுவாத சாந்தவரை நிற்குங்
கருதருசூ னியமாறுங் காரணத்தியா கமதாம். ௰௫

18 யோகமதாய் விடுங்கன்ம மத்தனையு முணர்ந்தங்
குச்சரிக்கு மிடத்தகா முதன்மூன்றக் காத்தைப்
பாகமதா யுச்சரிக்கு மிடம்பரம சாக்கிரம்
பகர்விந்து வினிலுன்ற லதுபரம சொற்பன
மாகமுறு மர்த்தசந்திரன் முதல்நாதம் நாவில்
வந்துறுத லதுபரம சுழுத்தியதாஞ் சத்தி
சேகறுவியா பினிசமனை யுன்மனையாஞ் சத்தி
செறிகலைநா விலும்பரமமிக் கூடியதே துரியம். ௰௬

19 பிரிவிலரும் வியோமரூ பினியனந்தை யனாதை
பேசுமனா சிருதையெனும் நாலுசிவ கலையில்
மறுவறவே ஞானசத்தி யிடமாக வொடுங்கில்
வரும்பரமா தீதமதா நமந்தவத்தை விளைய
நெறிதிகழு முன்மனியி னந்தியத்தி லனாதி
நிகழ்த்துசிவ மகாகற்பத் தொருகோடி யிரவி
செறிகதிர்போல் விளங்கிடுவ ரவ்வொளியைக் காணுந்
திறமதனை யுரைத்திடுவன் சிவாகமத்தின் படியே. ௰எ

20 நின்மலமா நமந்தவத்தை நீங்கும்வகை யுரைக்கில்
நிகழுமகா ரமுமனமு மிந்திரியமீ ரைந்துஞ்
சொன்மையதா மிதயமதிற் கிரியாசத் தியினாற்
றுகளறநீங் கிக்காண்டல் நின்மலசாக் கிரமாம்
வன்மையுறு முகாரமொடு புத்தியுமாத் திரைகள்
வருபத்துங் கண்டத்தில் ஞானசத்தி யாலே
புன்மையற நீங்கிக்கண் டிடலேசொற் பனமாம்
புகலுமகா ரத்தினுட னாங்கார மதுவும். ௰அ

21 அடிநாவி லிச்சாசத் தியினாலே நீங்கி
யவ்வொளியைக் கூட்டுகின்ற வவதாமே சுழுத்தி
வடிவான விந்துவுஞ்சித் தமும்புருவ நடுவில்
மன்னுதிரோ தானசத்தி யதனாலே மறித்து
நெடிதாக வதிற்கூடிக் கலத்தலது துரியம்
நிகழ்நாத முளத்தொடு பிரமாந்திர மீதி
லடியான பரையாலே நீங்கியதிற் கலத்த
லவ்வறிவுமிகக் கெடுவதுநின் மலதுரியா தீதம். ௰௯

22 இவ்விடத்திற் றன்னதுஞா துருஞான நேய
மிவைநாடா துன்மனைக்கு மப்பாலா யிருக்குஞ்
செவ்வியபூ ரணஞானா னந்தத்தைப் பெறுதல்
திகழ்சுவா னுபூதியெனு மான்மவிலா பமதா
மவ்விதியின் படியேசோ டசகலைக ளெல்லா
மருஞ்சோபா னமதாக வகற்றியதன் முடிவிற்
றிவ்வியமாம் பாவத்துத் தெரிசனம தென்னத்
தெரித்தபிரா சாதத்திற் சடத்வாக்க டனிலும். உ௰

23 அந்தரங்க சொரூபமதாய் நின்றிடுமா கமத்தி
லரியபொரு டனைப்பிண்ட மாகியதே கத்தும்
பந்தமுறு மண்டமதாம் பிரமாண்டந் தனிலும்
பகர்ந்தசரா சரங்களெனும் பல்லுயிர்க்கு முயிராய்ச்
சந்தமுறுஞ் சகச்சிருட்டி காரணமு மாகிச்
சச்சிதா னந்தமதாம் பரவத்து வதனை
யெந்தையென நாடோறு மனுசங்கா னஞ்செய்
தேத்திடுவ ரிருவினைக ளகன்றவிருந் தவரே. ௨௧

24 ஆதியகார முகார மகாரம் விந்து
வர்த்தசந் திரனிரோதி நாதநா தாந்தங்
கோதில்சத் தியாபினி யேவியாம ரூபை
குலவனந்தை யனாதை யனு சிருதையுடன் சமனை
நீதமுறு சமனாந்த முன்மனையி னனந்த
நிறைபரையப் பாரந்தமுட னீடுசிவ மந்தம்
பேதமுறு சமனையுடன் சமனாந்த மாகப்
பேசுமவற் றுட்சமனாந் தஞ்சமனை பிறங்கும். ௨௨

25 உன்னிடுமுன் மனாந்தமுன் மனையதனி லொடுங்கு
மோது பராந் தம்பரையி லுறுஞ்சாணுந் தந்தான்
மன்னுசரா ணங்களிலு மடங்கிநின்ற கலைகள்
மருவிடுகா லைந்தாக மதித்திடுவ ரவற்றுள்
முன்னுரைத்த வகாரவுகா ரமகாரம் விந்து
மொழியர்த்த சந்திரனென் னுங்கலைகண் முறையே
சொன்னநிவிர்த் தாதிபஞ்ச கலையெனப்பேர் பெற்றுச்
சொலுமேதை யருகசிசம் விடவிந்துக் கலையே. ௨௩

26 அருத்தசந் திரனெனவும் பெயராகி நிற்கும்
மக்கலைரு பங்களிலே யடங்குமெழுத் தறையில்
விரித்தவகா ரத்திலே நகாரமுகா ரத்தில்
மேவுமகா ரமதாகு மகாரத்திற் சிகாரந்
திருத்தமிகு விந்துவிலே வகாரமுநா தத்திற்
செறிந்தயகா ரமதாகச் செப்பிடுமிங் கிவற்றுட்
பொருத்தககா ரத்திலிரு நூற்றிருபதன் னான்கு
பிறவிலரும் புவனத்துவாப் பிறந்திடுமென் றுணரே. ௨௪

3

27 எண்ணுமகா ரத்திலெண்பத் தோர்பதமுஞ் சிகாரத்
தெய்த்திடுதத் துவமுப்பத் தாறும்வகா ரத்தில்
நண்ணிடு மக்கரமைம்பத் தொன்றும்யகா ரத்தில்
நாட்டுமனுப் பதினொன்றும் நவிலநமோங் காரத்
துண்ணிலவு நிவிர்த்தாதி கலையைந்து முதித்திங்
கோதுசடத் துவாக்களுயர் சதாசிவதே வர்க்கங்
கண்ணுதிரு மேனியுமா யிருக்குமினிக் கலைக
ளைந்தான்ற சரிதைகிரி யையும்வருமென் றறியே. ௨௫

28 அங்கவற்றுற் சமயமொடு விசேடநிருவாண
மருள்வழிச்சாம் பவமதன்மேல் வீடேக மென்னும்
பங்கமிலாத் தீக்கைகளுமடங்கினவா றுணர்க
பகர்நிரோதி நாதமுட னாதாந்த மூன்றிற்
றங்குமைம்பத் தோரெழுத்து மாகமவே தங்கள்
சாத்திரங்கள் தோன்றியிடுந் தருவிந்து நாதம்
பொங்கிடுநா தாந்தமதில் நால்வாக்கேழ் கோடி
போற்றுமனு வுற்றடங்கி நிற்கும்பொற் புறவே. ௨௬

29 பன்னியிடு மேதையருக் கீசம்விட கலையே
பயில்விந்து வர்த்தசந் திரனிரோதி நாத
மன்னியிடு நாதாந்தஞ் சத்திவியா பினிமேல்
வருசமனை யுன்மனைபன் னிருகலையாய் மருவு
மின்னிலகு சமனைக்கும் வியாபினிக்கும் நடுவே
வியோமரூ பினியனந்தை யனாதையனு சிருதை
யென்னுமொரு நாலுகலை பொருந்தியிடாக் கலைக
ளீரெட்டா யுரைக்குமா னிணையடிக்கீ ழிவையே. ௨௭

30 அறைந்திடும்பன் னிருகலைக்கு மாத்திரைகள் வகுக்கி
லருமேதை மூன்றுகு மருக்கீச மிரண்டா
முறைந்தவிட கலையொன்றும் விந்துகலையரையா
மூயார்த்த சந்திரன்கால் நிரோதியரைக் காலாங்
குறைந்திடுமா காணியதாம் நாதம்நா தாந்தங்
குலவணுமா வரைக்காணி சத்தியைம் முந்திரிகை
நிறைந்தவியா பினியுமதிற் பாதியதாஞ் சமனை
னோமுன் மனையதுகீ ழுரையதனைக் காலே. ௨௮

31 ஆதார முதலுந்தி யளவுங்கோ டகலை
யதனினுறு மிதயாந்த மேதகலை யிதய
மீதாருங் கண்டவள வருக்கீசங் கண்ட
மேற்றுனு வளவும்விட கலைபுருவம் விந்து
வோதாரு நெற்றிநடுப் பிரமாந்திர மீறு
யொளிகொளர்த்த சந்திரனே நிரோதி நாதம்
நாதாந்தம் பிரமாந்திர மேற்றுவாத சாந்தம்
நடுச்சத்தி வியாபினியுஞ் சமனையுமுன் மனையாம். உகூ

32 உரைத்திடுமூ லாதார முதனுபி யந்த
முறுகோட கலைத்தான மொருபதிரு விரலாம்
வரைத்திடுமுந் தியினின்று மிதயாந்த மேதை
மருவியிடு மங்குலியோ ரெட்டாக மதிக்கும்
நிரைத்திதய முதற்கண்ட மந்தமருக் கீசம்
நிகழும் விரலெட்டாகு நீள்கண்ட முதலாய்ப்
பெருத்திடுதா லுவின்மூல மளவும்விட கலையாம்
பிறங்கும்விரல் நாலாகப் பேசியிடு மன்றே. ௩௰

33 புருவநடு வரைவிந்துத் தானமுநால் விரலாம்
புகல்புருவ நடுப்பிரம ரந்திரமட் டாகப்
பெருகுமர்த்த சந்திரனே முதற்புகல்நா லுக்கும்
பிறங்கிடுமவ் வொன்றுக்கு மும்மூன்று விரலாம்
வருபிரம ரந்திரத்திற் சத்தியோ ரங்குலமேல்
மருவுவியா பினியொருமூன் றுஞ்சமனை நான்கா
மருவமுறு மூன்மனைக்கு மொருநான்காய்த் தான
மவையொன்பா னங்குலங்க ளறுபதெனவறியே. ௩௧

34 அவ்விடனு காரமகா ரம்பிறங்கும் விந்து
வருத்தசந்திரன் திரிகோண மாகியிடு மிதன்மே
லெவ்வமிலா விருமருங்கு சுழிநடுத்தண் டொன்றே
யியல்வலத்து விந்துவுடன் கலப்பைய தொன்றுகுஞ்
செவ்விவிந்து விடம்படைத்த நல்லாவமு மொன்றே
தெரிவலத்து விந்துவுடன் றிரிசூல மொன்றுங்
கவ்வையதி லிருவிந்து நடுவிரண்டு ரேகை
கருதியிடுங் குடிலமிவை கலைபனிரண் டினுக்கே. ௩௨

35 பதுமமல ரயன்மேதைக் கருக்கீசக் கலைக்குப்
பகர்திருமால் விடகலைக்குப் பரவுமுருத் திரனுஞ்
சிதைவில்பெரு விந்துவுக்கு மயேசுரனே தெய்வந்
திருந்துமர்த்த சந்திரன்முத லொருநான்கினுக்கு
முதியசதா சிவந்தெய்வஞ் சத்திமுதல் நாலா
முதற்கலைக்குச் சிவனெனவே மொழிந்திடுவர்முதியோர்
மதிபொதியுந் திருமுடியா னின்றதிரு வடிக்கீழ்
வரன்முறையா யிருப்பரென வழுத்திடுமா கமமே. ௩௩

36 பிரிதிவிமுதற பிரகிருதி பரியந்த மேதை
பேசருக்கீ சம்பொருந்தும் பிரிவில்கலை யாறில்
மருவும்விட கலைமாயை பொருந்திபிடும் விந்து
வளர்சுத்த வித்தையுட னீசுரத்தின் வகையா
முருவமுறு மர்த்தசந்திரன் முதலொருநான் கினுக்கு
மோங்குசதா சிவன்சத்தி சத்திமுத லுலாய்
மருவுகலை நாலுக்கும் சிவமாந்தத் துவமாம்
வருமுறையில் வியாத்தமென வழுத்திடுமாகமமே. ௩௪

37 உற்றசொரி தழலொன்று மதியிரவி கூடு
மொளியொன்று மின்னொளியொன் றுறுதீப மொன்று
மற்றிரும்வா ளொளியொன்று புகைநிறமொன் றுகு
மணிதிகழு மாணிக்க வொளிநாத மொன்று
குற்றமில்மின் னொளியிரண்டாம் நாதாந்த மொன்று
கூறிரவி நூறுசத்தி வியாபினியா யிரமாஞ்
சொற்றிடுமச் சமனையொரு கோடிகதி ரொளியாஞ்
சூழனந்த சூரியர்போற் றோன்றிடுமுன் மனையே. ௩௫

38 ஓதுகலை காரியங்கள் பொருந்தியிடாக் கலைக
ளூறுவியோம ரூபனந்தை யனந்தையனு சிருதை
தீதிலூறு விந்துவந்த நான்கினுக்கு நான்காந்
தீதில்ஞான வாகாய ஞானசாக் கிரம்பின்
னேதமிலா ஞானதருப் பணமுமகா கோடி
யிந்துவொளி யிவைதியான மென்பர்களுன் மனைக்கு
நீதமுற வுரைக்கிலது சமனுந்தம் பாசம்
நிகழ்துவாத சாந்தமே லுன்மனைக்கப் பாலாம். ௩௬

39 மிருமேதை முதன்மூன்று கலை முடிவி லொன்றும்
விந்துமுதல் மூன்றுகலை முடிவில்வினை வொன்றுந்
தருநாத முதன்மூன்று கலைமுடிவி லொன்றுஞ்
சத்திவியா பினிக்குமொன்று சமனையதற் கொன்றுந்
தொகுஞான வுன்மனைக்கு மொன்றுகப் பேத
சூனியமா றாகுமிதன் மேற்பாமாம் விசுவம்
புகுபிராணன் மனுநாடி பிரசாந்தஞ் சத்தி
புகல்காலந் தத்துவமென் றேழாகப் புகலும். ௩௭

பிராசாததீபம் முற்றும்.

உ

சிவமயம்.

கமலை ஞானப்பிரகாசதேசிகர் செய்த

பிராசாத மாலை.

காப்பு.

1 அருள்வளர் தில்லைமூதூ ரழகிய மன்றுளாடன்
மருவிய பெருமானீன்ற மழவிளங் களிறுகாப்ப
விரவிய சிவாகமத்தின் விதிவழி கலையீரெட்டுந்
திருமலி தமிழி னாலே தேர்ந்துரை செப்பலுற்றும்.

நூல்.

2 மேதையருக் கீசம்விட கலைமேல் விந்து
விரவுமர்த்த சந்திரன்மே னிரோதி நாத
மோதியநா தாந்தமொடு சத்திவியா பினியே
யுயர்சமனை யுன்மனைபன் னிருகலையா யோங்கும்
மீதிலகுஞ் சமனைக்கும் வியாபினிக்கு நடுவே
வியோமரூ பிணியனந்தை யனாதையனா சிருதை
யேதமறவே பொருந்திக் கலைபதினாறாகும்
ஈசனணி யம்பலத்தா னிணையடிக் கீழிவையே. (௧)

3 முன்னுரைத்த பன்னிரண்டு மாத்திரைகள் பெறுங்கான்
மூன்றாகு மேதையிரண் டருக்கீச முறையே
பன்னும்விட கலையொன்றாம் விந்துவின்பா லரையாம்
பகருமர்த்த சந்திரன்கா னிரோதிபடு மரைக்கால்
உன்னியமா காணிபெற நாதநா தாந்தம்
ஒருபதுமுந் திரையைந்து சத்திவியா பினியா
மன்னுமிரண் டரைசமனை யொன்றேகா லானுன்
[1]மனைமனமாத் திரையிவைகள் வருங்கோட கலைக்கே. (௨)

4 மூலமுத னாபியந்தங் கோடகலை நாபி
முதலிதயாந் தம்மேதை யிதயமுதற் கண்டத்
தேனுமருக் கீசவிடங் கண்டமுதற் றாலு
விரந்தரத்துட் புருவநடு விந்துநடு முதலாச்
சால்பிரம ரந்திரமட் டர்த்தசந்திரன் நிரோதி
தருநாத நாதாந்தந் தானாகு மிவைமேற்
கோலமுதற் றுவாதசாந் தத்தளவுஞ் சத்தி
குலவுவியா பினிசமனை யுன்மனையுங் குறிப்பாம். (௩)

5 பண்புறுமூ லாதார முதனாபி யந்தம்
பயில்கோட கலைத்தானம் பன்னிரண்டங் குலமே
நண்புதரு நாபிமுத லிதயாந்த மேதை
நவிலுவிரற் பன்னிரண்டா நல்லிதய முதலாக்
கண்டாந்த மருக்கீச மங்குலமேழ் காட்டுங்
கண்டமுதற் றாலுவிரந் திரம்வந்தங் காணிற்
கொண்டவிட கலைத்தான மங்குலநா லாகுங்
கொடும்புருவ நடுவிந்துத் தானமோ ரங்குலமே. (௪)

6 புருவநடு முதற்பிரம ரந்திரமட் டாகப்
பொருந்துமர்த்த சந்திரனே முதற்புகல் நாலினுக்கும்
பெருகிடுமோவ் வொன்றுக்கு மும்மூன்றாய் மருவப்
பேசும்விரற் பன்னிரண்டாம் பிரமரந்தி ரத்துக்
குரியசத்தி யங்குலமொன் றுயர்ந்தவியா பினிக்காம்
ஒருமூன்று சமனைக்கு மொருநான்குன் மனைக்கே

[பி - ம்.] [1]மனமாத்ரை யுன்மனைக்கு வருமிவைக ளுணரே,

வருநான்கங் குலமாகத் தானமிவை யொன்பான்
மதித்திடுமெங் குலமறுபா[1] னும்வழுத்துங் காலே. (௫)

7 மேதைமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
விந்துமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
நாதமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
நண்ணுவியா பினிக்குமொன்று நான்காவ ததுவே
யோதுசம னைக்குச்சூ னியமொன்றே யாகு
முரைப்பதுமைந் தாவதெனு முன்மனைக்குமொன்றும்
பேதமறு சூனியமாறாகுமதன் மீதே
பெரியபர மிருக்குமெனப் பேசுவர் நல்லோரே. (௬)

8 மிகுமகரத் தோடுகர மகராம் வட்டம்
வெண்மதியி னொருபாதி திரிகோண மிவைமேற்
பகருமிரு மருங்குசுழி நடுக்கலப்பை யொன்று
பயில்வலத்து விந்துவொரு கலப்பைப்பா லொன்றும்
நிகரில்விந்து விடம்படைத்த நல்வலமு மொன்றே
நிலையில்வலம் படைத்தவிந்து திரிசூலம் நிகழுந்
திகழுமிரு விந்துநடு விரண்டுபடு ரேகை
செறிகுடிலங் கலைவடிவந் தெரிபனிரண் டினுக்கே. (௭)

9 செங்கமலத் தயன்மேதைக் கருக்கீச கலைக்குத்
திருமாலாம் விடகலைக்குத் தெய்வமுருத் திரனும்
பங்கமிலா விந்துவுக்கு மகேசுரனே யாகும்
பரவுமர்த்த சந்திரனே முதற்புகனு லினுக்குந்
தங்குசதா சிவன்தெய்வஞ் சத்திமுதலாகத்
தருங்கலைக்குச் சிவனெனவே சாற்றுவர்நல் லறிஞர்
மங்குல்படி பொன்முகட்டு மணிமாடஞ் செறியு
மன்றுடையா னின்றதிரு மலரடிக்கீ ழிவையே. (௮)

[பி-ம்.] [1]ன் வகுப்பரறிந் தவரே.

10 மண்முதலாய்ப் பிரகிருதி பரியந்தம்[1] மேதை
வருமருக்கீ சம்படரு மாயைதவி ராறில்
எண்ணுமிட கலைமாயை பொருந்தியிடும் விந்து
விலகுசுத்த வித்தையுட னீச்சுரமட் டிருக்கும்[2]
நண்ணுமர்த்த சந்திரனே முதலொரு நான்கினுக்கும்
நாட்டுசதா சிவஞ்சத்தி சத்தமுதல் நான்காங்[3]
கண்ணுகலை நாலினுக்கும் சிவதிறந்தத் துவமாங்[4]
கனகமணியம் பலத்தான் கழலிணைக்கீழிவையே. (௯)

11 சொரிதழலொன் றிந்திரவி கூடுமொளி யொன்று
தோன்றிடமின் ன்னொளி[5]யொன் று சுடர்த்தீப மொன்று
பாவியவா ளொளியொன்று பிறைநிற[6]மொன் றுகும்
படர்காத மாணிக்க வொளியொன் று பார்க்கில்
வருமிரண்டு[7] மூன்னொளியாம் நாதாந்த மொன்று
வருமிரவி நூறுசத்தி வியாபினியா யிரமாம்
அருள் சமனையொருகோடி யாதவர்போ லெரிக்கும்
அனந்தசூ ரியரொளிபோ லணிதருமுன் மனையே. (௰)

12 விளங்குகலைக் காரியங்களத்தனையு மின்றும்
வியோமரூ பிணியனந்தை யனாதையனா திருதை
வளங்குலவு வடிவிந்து நால்கினுக்கு மொக்கும்
வழுத்திய ஞானகாயம் வளர்ஞானவாரி
துளங்கியசின் மயவாடி தூயமதி கோடி
சோதியிவை தியானமென வுன்மனைக்குச் சொல்வாங்[8]
களங்கமனு சமனாந்தமலந் துவா தசாந்தத் தளவுங்
கருதுநிரா தாரமா[9] மூன்மனையுங் கடந்தே. (௰௧)

[பி. ம்.] [1]பிரகிருதியந்தம் வரை. [2]னீச்சரமு மிருக்கும். [3]சிவஞ்சத்தி யிரண்டாக நவில்வர். [4]பரசிவந்தத்துவமாம். [5]மின்மினி. [6]புகைநிற. [7]வருகின்ற. [8]தியானமெனச் சொல்லுவர் நல்லறிஞர். [9]நிராதாரமென்பர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௱௰௨-ம் பக்கத்தொடர்ச்சி.]

மார்பினின்று வாளியை வாலி வாங்கிவிடக்கண்ட விண்ணவராதியர் விம்மிதராதல்.

பின்பு, இந்தச் சந்தேகம் தீர, இதனைப் பறித்து, வெளிப்படுத்திப் பார்ப்பேனென்று, மற்றுமொருமுறை முயன்று சற்று வெளிவந்த பாகத்தைப் பார்க்க, அது அம்பென்ற தன்மை விளங்கியது. ஆயுதம் இன்னதென அறிந்தேன். ஏவினவன் பேர் யாவதெனத் தெரிய இதனை முழுதும் பறிப்பேனென்று தனது முழுப்பலத்தையும் செலுத்தி மூன்றும் முறை முயன்று முற்றும் வெளிப்படுத்தினான். அதுகண்ட அமராதியோர், ஆச்சரிய பரவசராய்த், தாம் தாம் அந்த அருஞ்செயல் புரிந்தார் போன்று, வீராவேசம் மேவி "வீங்கினார்கள் தோள் வீரரை யார்விய வாதார்!" (தோள் வீங்கினார்-புயங்கள் பூரித்தார்கள்.) அம்பை அகற்றிய அக்கணமே, வெள்ளிமலையினின்று செங்கலங்கற் புதுப்புனலருவி இரைந்து விரைந்து பாய்ந்தாற்போல, வாலி மார்பினின்று (வாளி வந்த வழியே இரைச்சலோடு இரத்த வெள்ளம் புறப்படலுற்றது.

வாலி மார்பினின்று இரத்தம் புறப்படக்கண்ட சுக்கிரீவன் கண்ணீர்சோர மண்மேல் வீழ்தல்.

அந்த இரத்தப் பிரவாகத்தைச் சுக்கிரீவன் கண்டவுடனே, அதுவரையும் தமயன் திறத்தில் பகைமைபால் வன்மையுற்றிருந்த மனம் மென்மையுற்று நீராய் நெகிழ்ந்து பொங்கி யெழுந்து விழிவழியொழுகினாற்போலக், கண்ணீர் சோர, மண்மேல் வீழ்ந்தான். அவன்கண்ணீர்ப் பெருக்கு பகைமையாகிய வடவாமுகாக்கினியால் அடங்கியிருந்த சகோதர வாஞ்சையாகிய சமுத்திரம், அந்த அக்கினி அவிந்ததனால் கரைபுரண்டு பெருகினாற் போன்றது.

வாலி, தான் பறித்தெடுத்த பாணத்தை முறித்தொழிப்பேனென் றெண்ணிக்கொண்டெழுந்து, அது முறிக்கமுடியாததென் றுணர்ந்து அதிற் செதுக்கப்பட்டிருந்த பெயரைத் தெரியக்கருதிப் பார்க்கலானான்.

அம்பிற் செதுக்கப்பட்டிருந்த ராம நாமத்தை வாலி காணல்.

461 மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்.

இ - ள். மூன்றுலகங்களினும் உள்ளார் அனைவருக்கும் மூலமந்திரமா யுள்ளதும், (பரமபதமாகிய - மிக மேலான சொல்லாகிய) தன்னைச் செபிப்பார்க்குத் தன்னையே (—பரமபதத்தையே - மோட்சத்தையே) தருகின்ற ஒப்பற்ற பெருமையுடைய சொல்லாயுள்ளதும், தான் (வேறொன்றின் துணையை வேண்டாமல் தனியாகவே இப் பிறப்பிலேதானே எழுவகைப்பிறவி (நோய்)க்கும் மருந்தாயுள்ளதும், 'ராம:' என்று (பிரசித்தமாகச்) சொல்லப்பெற்றதுமான சிறப்புப் பொருந்திய திருநாமத்தைக் கண்களால் தெளிவாகக் கண்டான், (வாலி).

மும்மைசால் - மூன்றாக அமைந்த. மும்மை - மூன்று (குறள் ௨௫ உரை). தமர்க்கு - தம்மவர்க்கு - தன்னைச்செபிக்கும் அடியார்களுக்கு' எழுமை - தேவர் மனிதர் மிருகம் பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும்) எழு (வகைப்) பிறப்புக்கள். 'தன்னை' என்பது உயர்வுபற்றியெனினும் எதுகைநோக்கி யெனினும் இரண்டையுங்கொண்டெனினும் 'தம்மை' எனப்பட்டதென்க. 'தமக்கு' என்பதும் பாடம். அதற்குச் செபிப்பார் தமக்கு (—செபிப்பார்க்கு) என்று பொருள்கூறுக.

வைணவர்க்கு மூலமந்திரமாய் ஸ்ரீமந்நாராயணன் மந்திரமாகிய 'ஓம் நாராயணாய நம:' என்பதை அவர்கள் செபித்தல்போல, அவன் அவதாரமான இராமன் மந்திரமாகிய 'ராமா' என்பதையும் செபிப்பர். இதனையும் மூலமந்திரமென்றது, உபசாரமாகக் கூறப்பட்டதெனினும், அதனையொத்த மகிமையுடையதென்பது பற்றிக் கூறப்பட்டதெனினும் பொருந்தும். இவ்விரு மந்திரங்களுள் பிந்தியதே பிரபலமாய்ப் பெருவழக்காய்ச் செபிக்கப்படுவதாகக் காணப்படுகிறது. இது, 'பின்முளைத்த கொம்பு முன்முளைத்த காதுக்கு மேலாய்விட்டது' என்ற பழமொழியை நினைவுறுவிக்கின்றது.

'தம்மை' என்றது, 'ராமா' என்ற சொல்லின் பொருளான இராமனைப் புலப்படுத்தி, அதன்மூலமாக இராமனாக அவதரித்த ஸ்ரீமந் நாரா

யணனைச்சுட்டி, அவனை அடையும் முத்தியாகிய 'பரமபதம்' என்பதை உணர்த்தியது. "'தம்மை' என்றது அந்த நாமத்தின் பொருளான எம்பெருமானைக் குறித்தது" என்றார் முந்திய உரைகாரரும்.

ராம மந்திரம், ஓம் நாராயணாயநம என்ற மந்திரத்தினோடு ஒத்த மகிமை குறிப்பதென்பது கொண்டால், 'தனிப்பெரும்பதம்' என்றது ஒப்பற்ற பெருமையுடைய சொல்லென்று பொருள்படும்; அது (ஓம் நாராயணாயநம), பல சொற்றொடராயிருத்தல்போலன்றி, இது (ராம), தனிச்சொல்லாயிருப்பதைக்கருதினால், 'தனிப்பெரும்பதம்' என்பது ஒற்றையாய் மகத்துவமுடையதாயுள்ள சொல்லென்று பொருள் படும்.

ராம மந்திரத்தைச் செபிப்பார்க்கு இப்பிறப்பின் இறுதியிலே முத்தி சித்திக்குமெனபதுபற்றியும் முத்தி அடைந்தார் திரும்பப் பிறவாரென்பதுபற்றியும் 'இம்மையே எழுமைநோய்க்கும் மருந்தினை' என்றார்.

நீதி துறந்த ராமன் பிறந்ததால், தொல்லறந்துறவாத சூரியகுலமும் அந்த நல்லறந்துறந்த தென்று வாலிநகையும் நாணமுங் கொள்ளல்.

461 இல்லறம் துறந்த நம்பி எங்களுக் காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன் தோன்றலால், வேத நூலில்
சொல்லறம் துறந்திலாத சூரியன் மரபும் தொல்லை
நல்லறம் துறந்த தென்னு நகைவர, நாணுட்கொண்டான்.

இ. ள். (கைகேயி சொற்படி காட்டுக்குப்போவதற்காகக்) கிருகத் தனாயிருந்தமை நீங்கி (வானப்பிரத்தன் ஆன புருடோத்தமனும் (என் தம்பிக்கு அநுகூலமும் எனக்குப்பிரதிகூலமுமாக,—இருவர் சேனா சகிதராய்ப் போர்செய்யாராய்த தொந்தயுத்தஞ்செய்புங்கால், அவ்விருவ ருள் ஒருவருக்குதவியாக மற்றொருவரை வேறெவரும்தாக்கும் அதரு மத்தினும் அதிக அதருமமான மறைந்துநின்று தாக்குதலைச் செய்வா னாகி) எங்கள் பொருட்டுத் தங்கள் (சத்திரியசாதிக்குரிய) யுத்ததருமத் தைக் கைவிட்ட வீரனுமான இராமனென்னுமவன் பிறந்ததனால் வேத சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட நல்ல தருமங்களை (ப்பரம்பரை பரம்

பரையாக) அநுட்டித்துவந்த (உயர்ந்த) சூரியதலமும் (ஏனைய இழிந்த குலங்கள் போலப்) பழமையான சுதருமத்தைத்துறந்து விட்டதே யென்றெண்ணி, (இராமனைப்பற்றிய இகழ்ச்சிச்) சிரிப்பு (ஒருபுறம்) உண்டாக, (மற்றொருபுறம், இவன் ஒருகாலும் தருமநெறிதவறானென்ற முழுநம்பிக்கையுடன் 'தருமமே தவிர்க்குமோ தன்னைத்தானரோ' என்று இவனைக்குறித்து என் மனைவியிடஞ் சொன்னேனே! என்னே! என் மதியீன மிருந்தவாறு! என்றெண்ணி) மனத்துக்குள்ளே (தன்னைப் பற்றிய) வெட்கமுற்றான்.

இல்லறம் - மனைவியுடன் வீட்டிலிருந்து வாழும் கிருகத்தாச்சிரமம்: 'இல்லறம் துறந்த' என்றது மனைவியுடன் காட்டிலிருந்து வாழும் வானப்பிரத்தாச்சிரமத்தை மேற்கொண்ட என்ற பொருள் பயந்து நின்றது, துறந்த - நீக்கிய. நம்பி - ஆடவரிற் சிறந்தோன் - புருடோத்தமன். வில்லறம் - விற்போர்க்குரிய நெறி; பொதுவாய்ச் சத்திரிய தருமத்தைக் குறித்தது. தங்கள் சத்திரிய சாதிக்குரிய வில்லற மென்பது, சுருக்கமாகத் 'தங்கள் வில்லறம்' எனப்பட்டது. வேதம் நூல் - வேதங்களும் நூல் (=சாத்திரங்)களும்; வேதமாகிய நூல். மரபு - வமிசம் - குலம். 'எம்மனோர்க்காக' என்பதும் பாடம்.

"நகைப்பு வந்தது இகழ்ச்சிபற்றி. 'பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு, உறைபதி யென்னு முலகு' என்றபடி பிறர்க்குவரும் பழியையும் தமக்கு வந்ததாகவே கருதி நாணுதல் உயர்ந்தோரியல்பாதலால், இராமனது பழிக்கத்தக்க செயலைக்குறித்து வாலி நாணங் கொண்டான். அன்றி, நாண் உட்கொண்டது, இங்ஙனஞ்செய்த போலி வீரனது அம்புபட்டதனால், தான் உயிரிழக்கநேர்தல் கருதி யென்றலுமாம்"

"வாலி இராமன் செயல்பற்றியுண்டான சிரிப்பை மறையாமல் வெளிப்படக்காட்டித், தன் செயலாலுண்டான வெட்கத்தைக்காட்டா தடக்கினனென்பார், 'நகைவர நாணங்கொண்டான், என்னாது 'நகைவர நாண் உட் கொண்டான்' என்றாரென்றலுமாம்.

வாலி எதிரே இராமன் வருதல்.

["என்ன ஆச்சரியம்! தலைவனே தவறுசெய்திட்டானே! இனித் தாழ்ந்தோர் தன்மையைச் சாற்றுவானேன் என்று வாலிகூறியது காதில்

வீழாநிற்க, அவனெதிரே, அரசநீதி தவறாமற் காக்க அவதாரஞ்செய்த இராமன் வந்தான். வில்லோடு விண்மீது விளங்கும் மேகம் மண்மீது வந்தாற்போலவந்த கோதண்டராமனை வாலி கோபித்து நோக்கி "என்ன எண்ணி என்ன பண்ணினாய்!" என்று ஏசுவானாய்ப் பேசுவானானான்.

இராமனை வாலி இகழ்தல்.

"தன் குலப்பெருமைக்குத் தாழ்வுநேராமல் சத்தியத்தைக்காக்கத் தன் இன்னுயிரைத் தியாகஞ்செய்த தாதாவான தசரத சக்கரவர்த்திக்கு மகனாகவும் பரம தருமாத்துமாவான பரதாழ்வானுக்குத் தமையனாகவும் பிறந்தாயே! அரசனானவன் அந்நியரைக் குற்றஞ்செய்யாமல் தடுத்துத் தானே செய்தானானால், அவன் செய்தானென்பதுபற்றிக் குற்றம், குற்ற மற்றதாய்விடுமோ!

உனது குலமோ, கருங்கடல் தோண்டினோர் கங்கையை வருவித்தோர் முதலிய பெரியோர் பிறந்த பெருஞ்சிறப்புற்றது! உனது வீரமோ, கானூடனுறை பல ஆயிர அரக்கரை ஏகனாக எதிர்த்து வென்ற பிரதாபம்பெற்றது! உனது தன்மையோ. திரிலோகத்தையும் உட்கொண்டது! உனது குணஞ்செயல்களோ, உத்தமமானவை! உனது ஆற்றலோ அபாரமானது! உன் பெருமை இப்படியெல்லாமிருக்க, நீ எல்லாமறிந்திருந்தும் ஏதுமறியாதவன்போலத், தருமம் தடுமாற இந்த அகிருத்தியத்தைச் செய்யலாமோ?

சீதையைப் பிரிந்ததனால் சித்தந்திகைத்து இச்செயல் செய்தாய்போலு மெனல்.

463 "கோவியற் றருமம், உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்,
ஓவியத் தெழுத லொண்ணா உருவத்தாய், உடைமை யன்றோ;
ஆவியைச், சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனைபோலும் செய்கை."

இ. ள். "சித்திரத்திலே தீட்டமுடியாத (திவ்விய செவ்வியதேக) லட்சணமுடையோனே, இராச தருமங்கள் (எல்லாம்), உங்கள் குலத்திற் பிறந்தோ ரெல்லாருக்கும் (அவர்களுடன் பிறந்து) உரிமையானவை யன்றோ, (அப்படியிருக்க, இப்படிச் செய்தாயாதலால்) ஆவியைப் போன்ற தேவியைப் பிரிந்தபின்பு (சித்தப்பிரமை கொண்டு, நற்செய்கை யென்று மயங்கித் தீச்செய்கை செய்யும்) செய்கைத்திகைப்பை அடைந்தாய் போலும்."

கோ. அரசன். இயல்—இயற்கை. கோ இயல் தருமம்—அரசர் (களுடைய) இயற்கைத் தருமங்கள். ஓவியம்—சித்திரம். எழுதல்—ஓவியந்தீட்டல் (தமிழ்ச்சொல்லகராதி) சித்திரித்தல் உருவம் அழகு; வடிவம். ஆவி, அன்னம் உவமையாகுபெயர்கள். இன்றியமையாமையி லும் மிக்க அன்பிற்கு இடமாதலிலும் ஆவியும், நடையழகில் அன்ன மும், சீதைக்கு உவமை. அமிழ்து—இனிமைக்கேயன்றிக்கிடைத்தற் கருமைக்கும் உவமையாயிற்று. ஓவியர்க்கெழுத, உடைமையன்றே, பிரிந்தபின்பு என்பனவும் பாடங்கள்.

வாலி, தன் ஆவிக்கே ஆபத்து விளைவித்துவிட்ட இராமன்பாற், கோபமும் இகழ்ச்சியும் கொண்டானெனினும், அவன்பால் வைத்திருந்த அன்பும் மதிப்பும் முழுதும் நீங்கினானில்லையென்பது, இக்கவியிலும் இதன் முன்னும் பின்னும் உள்ள இராமதூடண கவிகள் பெரும்பாலன வற்றிலும் இலை மறை காய்போல் இனிது விளங்குதல் நோக்கத்தக்கது. முந்திய பாட்டுக்களில், 'தீமைதான் பிறரைக் காத்துத் தான் செய்தால் தீங்கன்றாமோ' எனக்குற்றஞ் சுமத்திய போதே 'தாய்மையு மன்றி நட்பும் தருமமும் தழூவி நின்றாய்' என்றும், குலநல முதலிய பல நலங் களும் உயர்வொப்பின்றியுடைய நீ 'திண்மை அலமரச்செய்யலாமோ அறிந்திருந் தயர்ந்து ளார்போல்' என்றும் வந்தவைகளிலும், இப்பாட் பாட்டில், இயற்கைப் புத்தியோ டிருந்தால் செய்யாத தீச் செயலைத் தேவியைப் பிரிந்து சித்தந் திகைத்தமையாற் செய்தாய்போலும் என்றத னிலும் வாலிக்கு இராமன் மீதிருந்த அன்பும் மதிப்பும் முற்றும் நீங்க வில்லையென்பது தெற்றெனப் புலப்படும்.

பின்வரும் பாட்டுக்களிலும் வாலியின் இராம பத்தித்தீபம் அருகி ஒளிர்வுற்றதேயன்றி அறவும் ஒளி அற்று அவிந்தொழிந்திடவில்லை யென்பது அறியப்படும். தன்னை இராமன் மறைந் தெய்ததற்குப், பின்னர், இலக்குமணன் சமாதானங் கூறக்கேட்டு வாலி திருப்தியடைந்த வுடனே, அந்த அன்புத் தீபம் திடீரெனக் குதித்தோங்கியெழுந்து கொழுந்துவிட் டெரிந்து சொலிப்பதனால், அத்தீபம், எப்போதும் அவிந்ததில்லை யென்பது விசதமாம்.

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

சிவமயம்.

சேனாவரையம்.

பரிசோதனத்தொடர்.

முற்காலத்து நூல்களும் உரைகளும் புலவருளங்களையே யுறைவிடமாகக்கொண்டு மிளிர்வனவாகினவென விறையனாரகப் பொருளுரையானாகிக்கலாம்.

இப்பொழுதுஞ் சிலதனிப்பாக்கள் அங்ஙனமுறைகின்றன, என்பதொருவந்தம். தமிழ்ச்சங்கச் சைவநூற்பரிசோதகராயிருந்து காலஞ்சென்ற உயர்திரு. சோ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் திருவுளத்தில் சுவடிகளில்லாத பாக்களும் சுவடியுறைவிடத்தை நீங்கிய நூல்களும் பலவதிந்தன என்பது வெளிப்படையாகும்.

நான்மறையு மறையாளர் (பார்ப்பார்) மனத்திலும் நாவிலும் வதிகின்றன என்பதைத் தெளிவுறயாவருமறிவர்.

அங்ஙனமுறைதற்குக்காரணம் பரம்பரையாக ஒருவர் ஒருவர்க்குரைத்தலேயாம்.

இங்ஙனம் செவிவாயாகவுணர்ந்து நெஞ்சுகளனாக நூலுறையவிடின் நூல்கள் வழுப்படுதனேக்கியும் பிறகாரணங் கொண்டும் சுவடியையும் உறைவிடமாக்கினர். அவ்வாறாக்கியும் மூக்குணவசத்தாலோ அவத்தைவசத்தாலோசிலர்திருத்தி எழுதலுஞ் சொல்லலும் செய்ய வழுப்பட்டுவழங்கலாயின.

அவற்றுள் சேனாவரையம் என்னும் அருமந்தவுரையும் ஒன்றாகுமென்பது ஐயத்தினீங்கியதாகும்.

இவ்வுரை தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைப் பகல்செய்வான் போன்று விளக்குவதாய் நிகரற்று விளங்குவதாகும்; எனவுணர்ந்து மாட்சிமிக்கூர்ந்த இ. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கற்றோராலும்

மற்றோராலும் இயற்றப்பட்டவழூஉக் சுழூக்களை பலசுவடியும் நுண்மா ணுழைபுலமுங்கொண்டு பெரும்பாலு மொழீஇ வெளிவந்துலவுறச் செய்தார்கள். பின்னர் எஞ்சியவற்றுட் சிலவற்றை விஞ்சியபுலம்பெறு மேதகுபண்டித? அ. கோபாலையரவர்கள் போக்கெனக்கண்டு 'செந்தமிழ்' மூலம் அவைபோக்காமென்பதை யுணர்த்தித் திருத்தித்தந்துள்ளார்கள்.

பின் இவ்விருதிருத்தமுமேற்கொண்டு இன்னும் பலசுவடியும் கொண்டு நுண்மாணுழைபுலமுந்துணையாகப் புலமிக்க புலவராகிய பண்டித. கந்தசாமியாரவர்கள் திருத்திய திருத்தத்தோடு இவ்வமபம் திகழ்கின்றது.

இன்னும் பிழைகளுள்ளன: அதனுளென யான் றமிழ்ச்சங்கத்தில் கல்விபயிலுங்காலத் தெனதாசிரியரவர்கள் தண்ணளியா னுணர்த்தத் தெரிந்தனன்.

பின்னும் யான் ஆயுங்காலத்துச் சிலபிழைகள்தெரிந்தன அவற்றை யீண்டெழுதுவான் றுணிந்தனன்.

"சுட்டுமுதலாகியகாரணக்கிளவி
சுட்டுப்பெயரியற்கையிற்செறியத்தோன்றும்".

எனவருஞ் சூத்திரவிளக்கவுரையில் "சுட்டுமுதலாகிய காரணக்கிளவி உருபேற்றுநின்ற சுட்டுமுதற்பெயரோடு ஒப்பதோர் இடைச்சொல் லாகலின் சுட்டுபெயரியற்கையிற் செறியத்தோன்றும் என்றார்.—செயற்கென்னும் வினையெச்சம் உருபேற்றுநின்ற தொழிற்பெயரோடு ஒப்புமை யுடைத்தாயினும் உருபும் பெயரு மொன்றாகாது பகுப்பப் பிளவுபட் டிசையாது ஒன்றுபட் டிசைத்தலான் அதனின் வேறாயினாற்போல இதுவும் உருபேற்ற சுட்டுப்பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும் பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் வேறாகவே கொள்ளப் படும்," எனவரும் இவ்விரண்டு வாக்கியத்துள் முன்வாக்கியம்பொரு ளினிது புலப்படப் பிழையற்றுக்கிடக்கின்றது. பின்வாக்கியம் பிழை வந்து கலந்ததால் அங்ஙனங் கிடக்கவில்லையெனத் தெரிகிறது. அதனைத் தெரிவாம்.

இப் பின்வாக்கியம் உவமான உவமேய வடிவாய்த் திகழ்கின்றது

அவற்றுள் 'செயற்கு' என்னும் வினையெச்சம் உவமானம். 'சுட்டு முதலாகிய காரணக்கிளவி' உவமேயம். 'உருபேற்ற தொழிற்பெயர்' உவமானம். உருபேற்ற சுட்டுமுதற்பெயர் உவமேயம். என விளங்குகின்றன.

செயற்கென்னும் வினையெச்சமும், சுட்டுமுதலாகிய காரணக்கிளவியும் பகுப்பப் பிளவுபட்டிசையா, ஒன்றபட்டிசைக்கும்; உருபேற்ற தொழிற்பெயரும், உருபேற்ற சுட்டுமுதற்பெயரும் பகுப்பப் பிளவுபட்டிசைக்கும்.

அவ்வாக்கியத்தில் 'உருபும் பெயரு மொன்ருகாது' என்னுந்தொடரானது முன்னெழுதிய கருத்துக்கு மூரண்பாடாகத் திகழ்கின்றது. என்னை 'செயற்கென்னும்' வினையெச்சம் உருபேற்ற தொழிற்பெயரோடு ஒப்புதாயினும் 'உருபும்பெயருமொன்ருகாது' பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் அதனின் வேருயினுற்போல' என இருக்கின்றபடியேவைத்துப் பொருள்கொண்டால் 'உருபும் பெயரும் ஒன்ருகாது' என்பது உருபேற்ற தொழிற்பெயர்க்கே யடையாய் வருமாதலினென்க.

அன்றி, உருபும் பெயரு மொன்ருகாதென்பது வெளிப்படையாயிருக்க அதனையீண்டெழுதல் மிகைபடலாகுமே எனவரும் வினவிற்கு இடந்தருதலுமாயிற்று.

வினையெச்சம் பகுப்பப்பிளவுபட்டிசையாது என்பது கண்கூடாதலானும், உருபேற்ற தொழிற்பெயர் பகுப்பப்பிளவுபட்டிசைக்கும் என்பதுமற்றனமாகலானும் 'கூறியமுறையினுருபுநிலைதிரியாது' எனத் தொல்காப்பியர் கூறியிருத்தலானும் இதற்குரையியற்றுங்காலத்து 'வினைச்சொல் விறுதி இடைச்சொல்நிற்கு மென வேறுணரப்படாது அச்சொற் குறுப்பாய் நிற்குமன்றே இவையவ்வாறு பெயர்க்குறுப்பாகாது தாமென வேறுணரப்பட்டிறுதிநிற்கும் எனபார் 'நிலைதிரியாது' என்ருர்' எனச் சேனுவரையர் விளக்கக்கூறியிருத்தலானும், 'உருபும் பெயருமொன்ருகாது' என்பது உருபேற்ற தொழிற்பெயர்க்குரிய தன்மமாகுமெனக்கூறமுடியாது. வினையெச்சத்திற்குரிய தன்மமாகும் எனக்கூறமுடியாமை நிலையானதே.

‘பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தல்’ என்பது வினையெச்சத்திற்குரிய தன்மையாதலான் ‘உருபும்பெயரும் ஒன்றாகாது’ என்பது நின்றுவற்றுகின்றது. இங்ஙனம் நின்றுவற்றுகின்ற தொடரைச் சேனாவரையர் எழுதியிருக்கமாட்டார்; இத்தொடரில்லாமலேயே ‘செயற்கென்னும்வினையெச்சம உருபேற்றுநின்றதொழிற்பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும் பகுப்பப்பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் அதனின் வேறாயினாற்போல’ எனவே எழுதியிருப்பர் என நினைக்கின்றேன்,

இனிப் பெயர் என்பதற்கு நட, வா முதலிய பகுதிகளிலும் ஆற்றலுண்டெனக்கொண்டு உருபென்பது விகுதியாமெனத் துணிந்து, செயற்கென்னும் வினையெச்சம்பகுதியும் விகுதியுமொன்றாகாது பகுப்பப்பிளவுபட்டிசையாது எனக்கருதிக்கொள்ளுமாறு ‘உருபும்பெயருமொன்றாகாது’ என்னுந்தொடரை எழுதினர் எனக்கொண்டு அத்தொடர் இடைப்புகுத்தியதன்று என்று கூறினால் என்னையெனின்;—நன்னூல் விருத்தியுரையாசிரியர் ‘நடவாமடிசீ’ யென்னுஞ் சூத்திரத்து விளக்கவுரையில் நடவா முதலிய வினையடிகளை வினைப்பெயர் என்றும்,

“வேற்றுமைவினை என்னும் சூத்திரத்தில் விகுதியை உருபென்றும் எழுதினரேனும் சேனாவரையரன்ன மொழிதராமையானும் ‘கூறிய முறையினுருபு’ ‘வேற்றுமைப்பொருள் வயினுருபாகுநவும்’ யாதனுருபு’ ‘ஐயுருபு’ ‘உருபுபுணரியல்’ எனப் பலவிடங்களில் தொல்காப்பியர் வேற்றுமை யுருபையே ‘உருபு’ எனக்கூறிச்செல்லுதலானும் விகுதியை வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்’ எனவே கூறியிருத்தலானும் சேனாவரையர் விகுதியுறுப்பை உருபெனக்கூறியிருக்கமாட்டார் ஆதலானும் ‘உருபும் பெயருமொன்றாகா’தென்பது சேனாவரையர் மொழியன்றென்க எனக்கூறலாமெனவே எண்ணுகின்றனன்,

உம்மைதொக்கவெனுவென்கிளவியும்
ஆவீறாகியவென்றன்கிளவியும்
ஆயிருகிளவியுமெண்ணுவழிப்பட்டன.

இச்சூத்திரத்தின் விளக்கவுரையில், இவ் வெனக்களை ‘என’ ‘என்று’ என்னுமிடைச்சொற்களோடு சேர்ந்து நிற்கச்சூத்திரஞ்செய்யாது இத்

னையும் போந்தந்து கூறியது எற்றுக்கு என்னும்வினாவையுள்ளடக்கிய விடையாய் 'இவை எண்ணுதற்கண் வாராமையானும் 'அவற்றின் வரூஉமெண்ணினிறுதியும்' எனச் சூத்திரஞ்சுருங்குதற்சிறப்பினானும் அவற்றினைமீண்டுவைத்தார்' என்னுமொருதொடர் காணப்படுகிறது.

இவ்விடையைக் கூர்ந்துநோக்கின் சேனாவரையரிவ்வாறு எழுதியிருக்கமாட்டாரெனத் தெரிகின்றது. ஏனெனில் பின்சூத்திரத்தில் 'அவற்றின்வரூஉமெண்ணினிறுதியும்' எனவும், இச்சூத்திரத்தில் 'எண்ணுவழிப்பட்டன' எனவும் கூறியிருத்தலானும் அவற்றிற்கு முறையே சொல்லிய, "எனா, என்றா' என்பனவற்றின்வருமெண்ணினிறுதியும்" எனவும் 'எண்ணுமிடத்துவரும்' எனவும் உரைகண்டிருத்தலானும் 'செவ்வெண் ணிடைச்சொல்லன்றாயினும் எண்ணுதலுந் தொகை பெறுதலும் ஆகிய ஒப்புமையான ஈண்டுக்கூறினார் என விளக்கங்கூறுமுகத்தான் எனா என்றா என்பன இடைச்சொற்கள் என்பதும் அவை எண்ணின்கண்ணிகழும் என்பதும் அறியப்படுதலானும் 'எண்ணு வழிப்பட்டன எனவே அவைசொற்றொறும் வருதலேயன்றி விடையிட்டுவருமென்பதாம்' எனஎழுதி 'பின்சாரயல் புடைதேவகையெனா' எனவும் 'ஒப்பிற்புகழிற்பழியினென்றா" எனவும் இடையிட்டுவந்தவாறு' எனவுதாரணங்காட்டிவிளக்குதலானும் என்க.

சேனாவரையர் என்னனமெழுதியிருப்பரென்று பார்க்குமிடத்து 'எண்ணுதற்கண்ணல்லதுவாராமையானும்' 'அவற்றின்வரூஉமெண்ணினிறுதியும் எனச் சூத்திரஞ் சுருங்குதற் சிறப்பினானும் அவற்றை மீண்டுவைத்தார்' எனவே எழுதியிருப்பார் எனநினைக்கிறேன். எனா என்று முதலியன மற்றைய பொருளின்கண்ணும் வருதலறிக.

'எண்ணுதற்கண்வாராமையானும்' எனமுதலைப்படத் திருத்தியதற்குக்காரணம் என்னவென்று ஆயுங்காலத்து, 'உம்மைதொக்கஎனா வென்கிளவியெனவே எனாவும் என அச்சொல் உம்மோடு வருதலுமுடைத்

தென்பதாம் உம்மோடுவந்தவழி அவ்வெண் ணும்மை யெண்ணுளடங்கும்' எனஎழுதியவுரைக்கு எ‌ன என்பது தனித்து வாராமல் உம்மோடு வந்தவழி அஃது உம்மையெண்ணுளடங்கும் ; வேறெண்ணாகாது. எனப் பொருள் கொள்ள முடியாமல் உம்மையோடு வந்தவிடத்து அவ்வும்மை தான் எண்ணுளடங்கும் எனக்கொண்டு என என்று என்பன எண்ணுமிடத்து வாளாவருமெனக் கருதினமையே காரணமாகுமெனக் கருதுகின்றனன். அன்றி ஒருவரயர்வானங்ஙனமெழுத மற்றையோரும் பெரும்பாலும் அதனைப் பின்பற்றினரெனவுங் கூறலாம்.

'செந்தமிழ்சேர்ந்தபன்னிருநிலத்தும்
தங்குறிப்பினவேதிசைச்சொற்கிளவி'.

எனவருஞ் சூத்திரவுரையில், இறுதியாகத் 'தங்குறிப்பினவென்று தனிமொழி தன்பொருளுணர்த்து மாற்றுக்குச் சொல்லினர் ; இருமொழி தொடருமிடத்துத் தன்னை வந்தான் என வேண்டியவாறு வரப்பெறு மென்றுரல்லரென்பது ; என்னுந் தொடரென்று எழுதப்பட்டுளது, ஈண்டு 'தன்னை வந்தான்' என்பதிற்குப் பதிலாகத் 'தள்ளை வந்தான்' என்பதுதா னிருந்திருக்குமென எண்ணுகின்றனன், தன்னைவந்தானென்றிருந்தால் அஃதொரு குற்றமுடையதாகாதன்றே ?

'அவனிவனுவனென' என்னுஞ் சூத்திரத்திலும் உரையிற் சிலவிடங்களிலும் ஆடூஉ, மகடூஉ என எழுதாது ஆடூ மகடூ என எழுதியிருக்கின்றார்கள். அவற்றையும் ஆடூஉ மகடூஉ எனத்திருத்தின் நலமாம் என உன்னுகின்றனன்.

பண்டித. சித. நாராயணசாமி,
அறுபத்துமூவர்மடம், திருவையாறு.